செ.வெ.எண்-171 நாள்-14.03.2021

**வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினார்**

தஞ்சாவூர் மாநகராட்சி அருளானந்த நகரில் மாநகராட்சி சார்பில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.03.2021) தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

நடைபெற்று வரும் 2021 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும் 100 சதவீதம் வாக்களித்திட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. தஞ்சாவூர் மாநகராட்சி சார்பில் கடந்த நாடளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் குறைவான வாக்கு பதிவு பதிவான பகுதிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது, இன்று அருளானந்த நகரில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கும் நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்து வீடு வீடாக சென்று வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்து துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். முன்னதாக அருளானந்த நகரில் 50 மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியினை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து பி.வி. செல்வராஜ் மகளிர் மேல்நிலைபள்ளியில் நடைபெற்று வரும் புதிய வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் புதிதாக சேர்ந்த வாக்காளர்களுக்கு இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்து வாக்காளர் சீட்டு வழங்கும் முகாமினை பார்வையிட்டு புதிய வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் திருமதி. ஜானகி ரவிந்திரன், தஞ்சாவூர் தேர்தல் நடத்தும் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியர் திருமதி. வேலுமணி, வட்டாட்சியர் திரு. பாலசுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**